# சாத்தான் ஓதும் வேதங்கள்



காணும் இடமெங்கும்
கரிக்குண்டுகளின் வீச்சுக்கள்...!
கால் தடம் பதிவெங்கும்
ஷெல்களின் துகள்கள்..!

வெள்ளவேடு சாமிகளுக்கு
பூஜையோடு
கந்தக வாசனையும்..!
எரியூட்டவும், ஈமம் செய்யவும்
நாதியற்று எரியும்
பிணங்களின் வீச்சங்கள்..!
நெடுஞ்சாலையில்
தனித்துக்கிடக்கும் குழந்தையின்
ஒத்தைச் செருப்பைக் கண்டு பதறிய
நெஞ்சம்....

இன்று...
பிஞ்சுகள் உயிரற்று கிடந்தாலும்
பதறாமல்
புலம் பெயர்கிறோம்...!



எட்டிவிட்டதாம் இறுதிகட்ட சமர்..
நச்சுக்காற்று வீசி பிணம் தின்னும்
கழுதைப்புலிகள்....,
கரும்புலிகளுக்கு ஒப்பாவதில்லை..!

சாத்தான் ஓதும் வேதங்கள்
இன்று சபையேறினாலும்
கரையேறப்போவதில்லை....!
கனவு மட்டுமல்ல..!
ஈழம் எங்களுக்கு...!
இரத்த நாளம்...!

--- பிரநேசம்.

pranesam@yahoo.com
http://pradeepnesam.tamilblogs.com